ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2275/02 - 2022 අප්‍රේල් මස 13 වැනි බදාදා - 2022.04.13
*2275/02 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பதில் நிதி அமைச்சர், எம். யூ. எம். அலி ஸப்ரி ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபார பண்ட இனம் தொடர்பில் அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டதும், 2021, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதிய 2225/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையானது, 2022, ஏப்பிறல் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருமாறு மீளப்பெற்றுக்கொள்ளப்படுகின்றது.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக இக்கட்டளையானது, 2022, ஏப்பிறல் மாதம் 14 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 06 மாத காலப்பகுதிக்கு செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

**எம். யூ. எம். அலி ஸப்ரி,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2022, ஏப்பிறல் 11.*

1A - PG 5813 — 485 (2022/04)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபார பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ.மு. தலைப்பு | இ.மு. குறியீடு | விவரணம் | |
| 1 | 03.02 | | மீன், புதியது அல்லது குளிரூட்டப்பட்டவை, தலைப்பு 03.04 இன் கீழ் தரப்பட்ட முள்ளற்ற துண்டுகளையும் மீன் இறைச்சியையும் தவிர்ந்தவை | 10% அ. கி. கி. இற்கு ரூ. 200.00, எது உயர்வானதோ அவ் வரி பெறுமதி |
| | 03.03 | | மீன், குளிரால் உறையச் செய்யப்பட்டவை, தலைப்பு 03.04 இன் கீழான முள்ளற்ற துண்டுகள், பிற மீன் இறைச்சி நீங்கலாக (இ.மு. குறியீடு 0303.54 இன் கீழ் வரும் மெகரல் மீன் மற்றும் இ.மு. குறியீடு 0303.55 இன் கீழ் வரும் ஜெக் மற்றும் ஹோஸ் மெகரல் - ட்றாச்றஸ் இன/மீன் தவிர்ந்தவை) | 10% அ. கி. கி. இற்கு ரூ. 200.00, எது உயர்வானதோ அவ் வரி பெறுமதி |
| 2 | 03.05 | 0305.59.10 | மாசி மீனும் அதற்குப் பதிலானவையும் | கி. கி. இற்கு ரூபா 302.00 |
| 3 | 07.13 | 0713.31.19 | பிற - பாசிப் பயறு | கி. கி. இற்கு ரூபா 40.00 |
| 4 | 07.13 | 0713.40.11 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) முழுமையானவை | கி. கி. இற்கு 25 சதம் |
| | | 0713.40.12 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) பிளக்கப்பட்டவை | கி. கி. இற்கு 25 சதம் |
| | | 0713.40.21 | மஞ்சள் பருப்புக்கள் - முழுமையானவை | கி. கி. இற்கு 25 சதம் |
| | | 0713.40.22 | மஞ்சள் பருப்புக்கள் - பிளக்கப்பட்டவை | கி. கி. இற்கு 25 சதம் |
| 5 | 08.04 | 0804.50.50 | மங்குஸ்தான் பழங்கள் - புதியவை | கி. கி. இற்கு ரூபா 200.00 |
| | | 0810.50.60 | மங்குஸ்தான் பழங்கள் - காய்ந்த | கி. கி. இற்கு ரூபா 200.00 |
| 6 | 08.10 | 0810.50 | கிவி பழங்கள் | கி. கி. இற்கு ரூபா 175.00 |

EOG 04 - 0064

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.